இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 07 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – ஆடி 31 – வெள்ளிக்கிழமை 16 ஆகஸ்டு 2024 – சென்னை 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 07 : Thiruvalluvar Year - 2055 - Aadi 31 - Friday 16 August 2024 - Chennai 16 Pages ₹ 5.00

## ஏழை எளியோருக்கு உதவிட புதிய திட்டம்

# “முதல்வர் மருந்தகங்கள்” - 1000 : பொங்கல் அன்று தொடக்கம் !

## 78 - வது சுதந்திர தின விழா : சென்னை கோட்டை கொத்தளத்தில் தேசியக் கொடியை ஏற்றி வைத்து ஆற்றிய உரையில்

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்ட அடுக்கடுக்கான அறிவிப்புகள் !

சென்னை, ஆக. 16-

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (15.8.2024) சென்னை, தலைமைச் செயலகக் கோட்டை கொத்தளத்தில் தேசியக் கொடியினை ஏற்றி வைத்து ஆற்றிய சுதந்திரத் திருநாள் விழாப் பேருரையில், ஏழை, எளிய மக்களுக்கு உதவிட புதிய திட்டமாக “முதல்வர் மருந்தகங்கள்” - 1000 முதல் கட்டமாக தொடங்கப்படும் என அறிவித்தார்.**

இவ்விழாவில் முதல்வர் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:-

★தாயின் மணிக்கொடி பாரீர்! அதைத்
தாழ்ந்து பணிந்து புகழ்ந்திட வாரீர்!

என்ற தேசியக்கவி பாரதியின் பாடல் வரிகளைப் பாடும் தகுதியை நமக்குத் தந்த இந்திய நாட்டு விடுதலை வீரர்கள் அத்தனை பேரையும் வணங்கி என் உரையைத் தொடங்குகிறேன்.

நாட்டு மக்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த விடுதலை நாள் நல்வாழ்த்துகளை முதலில் தெரிவித்துக் கொள்கிறேன்.

### விடுதலைக்குப் பாடுபட்ட தியாகிகளைப் போற்றுவோம்!

விடுதலையைப் பாடுபட்டுப் பெற்றுக் கொடுத்த தியாகிகளைப் போற்றுவோம். அவர்களின் குடும்பத்தினருக்கு நன்றியைத் தெரிவிப்போம். எந்த நோக்கத்துக்காக அவர்கள் போராடினார்களோ, அந்த நோக்கம் நிறைவேற எந்நாளும் உழைப்போம் என்று இந்நாளில் உறுதி ஏற்போம்.

இந்த விடுதலை எளிதாகக் கிடைத்த விடுதலை அல்ல. முந்நூறு ஆண்டு காலப் போராட்டத்துக்குப் பின்பு கிடைத்த சுதந்திரம் இது. இரத்தத்தையே வியர்வையாகத் தந்து, தங்கள் உடலையே விடுதலை உலைக்களத்துக்கு உணவாகத் தந்த எண்ணற்ற தியாகிகள் நம் இந்திய மண்ணில் உண்டு. அதிலும், குறிப்பாக தமிழ்நாட்டில் அதிகம் உண்டு. இந்திய தேசிய இராணுவத்தை உருவாக்கி, வெளிநாடுகளின் உதவியையும் பெற்று நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் படை நடத்தியபோது, கரம் கோர்த்தவர்கள் தமிழ்நாட்டு வீரர்கள். விடுதலையை அடைய கால நிர்ணயம் இல்லை என்று தெரிந்தும், உயிரையே ஈந்த மாவீரர்கள் வாழ்ந்த மண், இந்தத் தமிழ் மண். அறவழியில், எதிரியைப் பணிய வைத்த அண்ணல் காந்தியடிகளின் பின்னால் முழு மனதோடு இந்தியா அணி வகுத்தது. அதிலும் தமிழ்நாடு முழுமையாகக் கை கோர்த்து நின்றது.

### சத்தியப் பாதையில் அணிவகுத்தவர்கள் தமிழ்நாட்டுத் தியாகிகள்!

“கத்தியின்றி இரத்தமின்றி
யுத்தமொன்று வருகுது
சத்தியத்தின் நித்தியத்தை
நம்பும் யாரும் சேருவீர்”

என்று நாமக்கல் கவிஞர் பாடிய பாடல் வரிகளுக்கு ஏற்ப சத்தியப் பாதையில் எத்தனை சோதனைகள் வந்தாலும், அணி வகுத்தவர்கள் தமிழ்நாட்டுத் தியாகிகள். இவர்களின் தியாகத்தால்தான், 1947 ஆகஸ்ட் 15ஆம் நாள் விடுதலைக் காற்றைச் சுவாசித்தோம். 'நமக்கான நாடு நமதே' என்பதை உணர்ந்தோம். நினைத்துப் பாருங்கள், 77 ஆண்டுகளைக் கடந்து விட்டது விடுதலை இந்தியா. தியாகிகளின் கனவான அனைவருக்குமான இந்தியாவை நாம் உருவாக்கி வளர்த்து வருகிறோம். வேற்றுமையில் ஒற்றுமை, ஒருமைப்பாடு, ஒருங்கிணைந்த வளர்ச்சி இவற்றின் ஒன்றுபட்ட வலிமையே நாட்டின் வல்லமையாக உலகுக்குக் காட்டி வருகிறோம். ஒரு வண்ணமல்ல நமது கொடி, அது மூவண்ணக் கொடி! நமது பன்முகத்தன்மையின் அடையாளம் இந்தக் கொடி!

விடுதலை நாள் என்பது, அரசியல் விடுதலை நாளாக மட்டுமல்லாமல், பண்பாட்டு விழாவாக ஒட்டுமொத்த இந்திய மக்களால் கொண்டாடப்படுகிறது. ஆகஸ்ட் 15 என்பது ஆனந்த சுதந்திரம் அடைந்த நாள் மட்டுமல்ல, ஆனந்தமான இந்தியாவை அடுத்தடுத்த ஆண்டுகளில் உருவாக்கத் திட்டமிடும் நாளாகவும் கொண்டாடிக் கொண்டிருக்கிறோம்.

இந்தத் திருநாளின் வெற்றிச் சின்னமாக விளங்கும் நம் தேசியக் கொடியை தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலக முகப்பில், ஓங்கி உயர்ந்து நிற்கும் கம்பத்தில் ஏற்றி வைத்துப் பட்டொளி வீசிப் பறக்க விட்டுள்ளோம். விடுதலை நாளில் மாநில முதலமைச்சர்கள் கொடியேற்றும் உரிமையை 50 ஆண்டுகளுக்கு முன்னால், முதன்முதலில் 1974ஆம் ஆண்டு பெற்றுத் தந்தவர், நம் நெஞ்சங்களில் என்றென்றும் நீக்கமற வீற்றிருக்கும் நூற்றாண்டு நாயகர் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள்!

### தமிழ்நாட்டு மக்களுக்கு என்றென்றும் நன்றிக்குரியவன்!

**இதுவும் ஒரு விடுதலைப் போராட்டம்தான்! மாநிலங்களுக்கு அதிக உரிமைகள் வேண்டும் என்பதற்கான போராட்டம்! முத்தமிழறிஞர் கலைஞர் அன்று பெற்றுத்தந்த உரிமையின்படி, அவரது நூற்றாண்டு நிறைவு விழா ஆண்டில், இன்று நானும், நான்காவது ஆண்டாக சென்னை கோட்டைக் கொத்தளத்தில் தேசியக் கொடியை ஏற்றும் வாய்ப்பைப் பெற்றமைக்காகப் பெருமை அடைகிறேன். இந்த அருமையான வாய்ப்பை தமிழ்நாட்டின் முதலமைச்சராகக் கொடியேற்றும் வாய்ப்பை எனக்குத் தந்த எனதருமைத் தமிழ்நாட்டு மக்களுக்கு என்றென்றும் நன்றிக்குரியவன் ஆவேன்.**

நம் நாட்டில் விடுதலைக்காக 300 ஆண்டுகளாய் நிகழ்ந்த நெடிய போராட்டங்களில் இன்னுயிர்களை ஈந்தும், உடல் உறுப்புகளை இழந்தும், சொத்து சுகங்கள், மனைவி மக்கள் அனைத்தையும் பறிகொடுத்தும், நம் நாட்டின் விடுதலையை நமக்குப் பெற்றுத் தந்த வீரதீரத் தியாக வேங்கைகள் அனைவருக்கும் நம்முடைய நன்றிகளைத் தெரிவிக்கும் அடையாளமாக வீர வணக்கம் செலுத்திடுவோம்! இன்று மட்டுமல்ல; என்றைக்கும்அந்தவீரத்தியாகிகளைநினைவுகூரும் வகையில் அவர்கள் வாழ்ந்த பகுதிகளில்

தொடர்ச்சி 3ஆம் பக்கம்



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், சுதந்திரத் திருநாளையொட்டி நேற்று (15.8.2024) சென்னை, தலைமைச் செயலகக் கோட்டை கொத்தளத்தில் தேசியக் கொடியினை ஏற்றி வைத்து மரியாதை செலுத்தினார்.

### கலைஞர் பெற்றுத் தந்த உரிமை!

**இந்தத் திருநாளின் வெற்றிச் சின்னமாக விளங்கும் நம் தேசியக் கொடியை தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலக முகப்பில், ஓங்கி உயர்ந்து நிற்கும் கம்பத்தில் ஏற்றி வைத்துப் பட்டொளி வீசிப் பறக்க விட்டுள்ளோம். விடுதலை நாளில் மாநில முதலமைச்சர்கள் கொடியேற்றும் உரிமையை 50 ஆண்டுகளுக்கு முன்னால், முதன்முதலில் 1974ஆம் ஆண்டு பெற்றுத் தந்தவர், நம் நெஞ்சங்களில் என்றென்றும் நீக்கமற வீற்றிருக்கும் நூற்றாண்டு நாயகர் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள்!**

---

## தமிழ்நாட்டிற்கு மேலும் தொழில் முதலீடுகளை ஈர்க்க

# முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆகஸ்ட் 27-அன்று அமெரிக்கா பயணம்!

## தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா அறிவிப்பு!

சென்னை, ஆக.16-

தமிழ்நாட்டிற்கு மேலும் தொழில் முதலீடுகளை ஈர்ப்பதற்காக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வருகிற 27ஆம் தேதி அமெரிக்காவுக்கு சுற்றுப் பயணம் மேற்கொள்கிறார். 17 நாட்கள் பயணத்தின்போது, முன்னணி நிறுவனங்களின் தலைவர்களை சந்தித்து முதலீடுகள் குறித்து பேசும் முதலமைச்சர் அவர்கள், அமெரிக்க வாழ் தமிழர்களையும் சந்தித்து கலந்துரையாடுகிறார்.

தமிழ்நாட்டை, 2030ஆம் ஆண்டுக்குள் 1 லட்சம் கோடி டாலர் பொருளாதாரம் கொண்ட மாநிலமாக மாற்றுவது என்ற இலக்குடன் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், பல்வேறு திட்டங்களை வகுத்து செயல்படுத்தி வருகிறார். தமிழ்நாட்டிற்கு தொழில் முதலீடுகளை ஈர்க்கும் வண்ணம், ஏற்கனவே, சிங்கப்பூர், ஜப்பான், துபாய், ஸ்வீடன், ஸ்பெயின் உள்ளிட்ட நாடுகளுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சுற்றுப்பயணம் மேற்கொண்டார். இதன்மூலம் பல ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பில் முதலீடுகளும் தமிழ்நாட்டிற்கு கிடைத்தன.

கடந்த ஜனவரி மாதம் சென்னையில் நடைபெற்ற உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் 6.64 லட்சம் கோடி ரூபாய் மதிப்பில் முதலீட்டுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின. இதன்மூலம் சுமார் 27 லட்சம் வேலைவாய்ப்புகள் உருவாக்கப் பட்டுள்ளன. இந்நிலையில், தமிழ்நாட்டுக்கு மேலும் தொழில் முதலீடுகளை ஈர்க்கும் வகையில், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், வருகிற 27ஆம் தேதி முதல் 17 நாட்கள் அமெரிக்காவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொள்கிறார்.

சென்னையில் இருந்து 27-ஆம் தேதி அமெரிக்கா செல்லும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 28ஆம் தேதி அங்குள்ள சான் பிரான்சிஸ்கோ செல்கிறார். 28ஆம் தேதியிலிருந்து செப்டம்பர் 2ஆம்தேதி வரை சான் பிரான்சிஸ்கோவில் முக்கிய முன்னணி நிறுவனங்களின் தலைவர்களை, முதலமைச்சர் சந்தித்துப் பேச உள்ளார். ஆகஸ்ட் 29ஆம் தேதி சான் பிரான்சிஸ்கோவில் நடைபெறும் முதலீட்டாளர்கள் மாநாட்டில் பங்கேற்கும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், ஆகஸ்ட் 31ஆம் தேதி அமெரிக்க வாழ் தமிழ்நாட்டு மக்களை சந்தித்து கலந்துரையாடுகிறார். செப்டம்பர் 2ஆம் தேதி சான்பிரான்சிஸ்கோவிலிருந்து சிக்காகோ செல்லும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், செப்டம்பர் 12ஆம் தேதி வரை அமெரிக்காவில் பார்ச்சூன் 500பட்டியலில் உள்ள சர்வதேச முன்னணி நிறுவனங்களின் முதலீட்டாளர்களை சந்தித்து தொழில் முதலீடுகள் குறித்து பேச உள்ளார்.

செப்டம்பர் 7ஆம் தேதி சிக்காக்கோவில் அமெரிக்க வாழ் தமிழர்களை சந்தித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கலந்துரையாட உள்ளார். உயர்தர வேலைவாய்ப்பு மற்றும் உயர்தர முதலீடு என்ற முக்கிய குறிக்கோளுடன் முதலமைச்சர் மு.க.ஸ்டாலினின் அமெரிக்க சுற்றுப் பயணம் அமைய உள்ளதாக தொழில் துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா தெரிவித்துள்ளார்.